**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 -ஆம் நாள், திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.852/2025**

**CNR.No.TNVP18 – 001658 - 2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் உதவி ஆய்வாளர் அவலூர்பேட்டை காவல் நிலையம். குற்ற எண். 133/2024 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | பிரேம்குமார், த/பெ. நாராயணமூர்த்தி, வசிப்பிடம் பைபாஸ் ரோடு, மாதா கோவில் தெரு, அவலூர்பேட்டை கிராமம், மேல்மலையனூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | Details of absondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 10.02.2024 |
| 9. | புகார் தேதி (Complaint) | 10.02.2024 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 10.02.2024 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 21.02.2024 |
| 12 | Period of Bail | 12 நாட்கள் |
| 13 | Commitment | --- |
| 14 | Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251 | 14.11.2025 |

| | | |
|---|---|---|
| 15 | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி<br>( Commencement of Trial) | 06.03.2026 |
| 16 | Date of Examination in Chief and Cross Witnesses | Chief Cross<br>PW1 06.13.2026 06.03.2026<br>PW2 11.03.2026 11.03.2026 |
| 17 | விசாரணை முடிக்கப்பட்டது தேதி<br>(Closure of Trial) | 11.03.2026 |
| 18 | Date of examination of accused<br>u/s. 313 Crpc (or) 351 of BNSS | 16.03.2026 |
| 19 | தண்டனை அல்லது உத்தரவு | 16.03.2026 |
| 20 | Details of Victim Compensation Order | --- |
| 21 | Grant of Stay by Superior Courts and their Results. | --- |
| 22 | எதிரி மீது சுமத்தப்பபட்டுள்ள குற்றச்சாட்டுகள் | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 352, 324, 506(ii) - ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 23 | சட்டப்பிரிவுகள் | இ.த.ச பிரிவுகள் 294(b), 352, 324, 506(ii) |
| 24 | தீர்ப்புரை | எதிரியை இ.த.ச பிரிவுகள் 294(b), 352, 324, 506(ii)- ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானிக்கப்பட்டு மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரி பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 14.08.2025 - ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 16.03.2026- ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 செஞ்சி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.ராஜா, B.Com., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசு தரப்பு வழக்கு :-</u>**

சாட்சி-1(குமரேசன்) என்பவர் கடந்த 10.02.2024 – ந் தேதி பகல் சுமார் 13.10 மணியளவில் அவலூர்பேட்டை பைபாஸ் சாலையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கேட் அருகே தர்பூசணி வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி பிரேம்குமார் என்பவர் சாட்சி-1 ஐ பார்த்து டேய் தெவிடியா பையா நீ எப்படி இங்கு கடை வைக்கலாம் என்று பேசிக் கொண்டே கையால் சாட்சி-1 ன் வலது பக்க கண்ணத்தில் அறைந்தும், அங்கிருந்த சைக்கிள் காத்தடிக்கும் பம்பால் சாட்சி-1 ன் இடது தோள்பட்டை, முதுகு மற்றும் கழுத்தில் சரமாரியாக தாக்கி உள்காயத்தை ஏற்படுத்தியும், எதிரி தர்பூசணி வெட்ட வைத்திருந்த கத்தியை எடுத்து காட்டி என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சாட்சி-1 ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்த குற்றங்களுக்காக எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 352, 506(ii) - ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக அவலூர்பேட்டை காவல்

நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு பி.என்.எஸ்.எஸ் பிரிவு 230 - ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள்** :-

வழக்காவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள்294(b), 352, 324, 506(ii)- ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு

குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என வினவப்பட்டது. எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**:-

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (குமரேசன்)** இவர் இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனுவில் உள்ள அவரது கையொப்பம்**) குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 (ரமேஷ் - சிறப்பு உதவி ஆய்வாளர்)** இவர் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.2**

**(புகார் மனு)**, **அ.சா.ஆ.3 (முதல் தகவல் அறிக்கை)**, **அ.சா.ஆ.4 (பார்வை மகசர்)**, **அ.சா.ஆ.5 (மாதிரி வரைபடம்)** மற்றும் **அ.சா.ஆ.6 (சட்டப் பிரிவு மாற்றல் அறிக்கை)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து பிரிவு 351 (1)(b) – பி.என்.எஸ்.எஸ் - ன் படி வினவிய போது, எதிரி அந்த சாட்சியங்களை மறுத்தார்.

**5. எதிரி தரப்பு வழக்கு:-**

அவர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரி தரப்பு வழக்கு. ஆனால், எதிரி அவரது தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்.

**6. இருதரப்பு வாதங்கள் :-**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் அவருடைய வாதத்தில், அ.சா.1 (குமரேசன்) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 (குமரேசன்) மற்றும் எதிரி தரப்பில் சம்பவம் குறித்து சமாதானம் ஆகிவிட்டதாக 359 BNSS பிரிவின் கீழ் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு ஆனது எம்.பி.எண்.1/2026 ஆக எண்ணிடப்பட்டு, அதில் இ.த.ச பிரிவு 294(பி) - ன் படியான குற்றம் இரு தரப்பினர்களிடையே சமரசம் செய்ய முடியாது என்பதால் அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

எதிரி தரப்பில், வாதிடும்போது, குற்றத்தை யார் புரிந்தார் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் படி நிரூபிக்க தவறியதால், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**8. தீர்வு: -**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 (குமரேசன்) இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். மேற்படி அவர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில், எதிரியின் மீது அ.சா.ஆ.3 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரிலுள்ள விவரங்களை பொறுத்து அ.சா.1 அவருடைய முதல் விசாரணையில், கடந்த 2024 - ம் வருடம் ஒரு நாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே இருந்தபோது அடையாளம் தெரியாத ஒருவர் வந்து தன்னை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டாதாகவும், யார் தாக்கினார் என்று அடையாளம் தெரியவில்லை என்றும், எதிரி தாக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இதுசம்மந்தமாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அதில் உள்ள விவரம் தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி நபர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையின் போதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக

சாட்சியமளிக்கவில்லை.

**(8.2)** அ.சா.2 (ரமேஷ் - சிறப்பு உதவி ஆய்வாளர்) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி நபர் அவரது சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, அ.சா.1 - ன் புகார் மனு பெற்று எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும் இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெற்றது பற்றியும், இவ்வழக்கின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமைந்துள்ளது.

**(8.3)** இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் எதிரிக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களின் மூலம் தெரிய வருகிறது. அ.சா.2 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்திருந்த போதிலும், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.2 – ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றத்தை எதிரி தான் செய்தனர் என்று கருத இயலாது. மேலும், வழக்கின் மற்ற சாட்சிகளான பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. எனவே, அரசு தரப்பு அதன் வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளதை தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக** – எதிரியை இ.த.ச.பிரிவுகள் 294(b), 352, 324, 506(ii) - **ன் கீழ்** பி.என்.எஸ்.எஸ் பிரிவு - 271(1) – **ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.** மேலும் எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9.சொத்து பற்றிய ஆணை :-** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகையால் அதை பற்றிய உத்தரவு எதுவுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA
Digitally signed by B VIDHYA
Date: 2026.03.16 17:43:33 +0200

நீதித்துறை நடுவர்,

செஞ்சி

**பின் இணைப்பு:-**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

அ.சா.1 குமரேசன் (புகார்தாரர்)

அ.சா.2 ரமேஷ் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |

| | |
|---|---|
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | சட்ட பிரிவு மாற்றல் அறிக்கை. |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :- இல்லை

**எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரி தரப்பு சான்றுபொருள்** :- இல்லை.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.03.16 17:43:40 +0200

**நீதித்துறை நடுவர்,**

**செஞ்சி**

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
3. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.